Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | | | |
|---|---|---|---|---|
| Calendar | .. .. | } | | |
| Miscellaneous | .. .. | } | | |
| Preliminary Register | .. .. | } | **S.C.145/2024** | |
| Sessions | .. .. | } | | |
| | | } | Prosecution | – **PW2** |
| Deposition of witness for | | } | Defence | – |
| | | } | Court | – |

| | | |
|---|---|---|
| Name | : | மகாலிங்கம் |
| Father Name | : | வீரமாகாளி |
| Village | : | முள்ளிமுனை |
| Taluk | : | திருவாடானை |
| Calling | : | மீன்பிடித்தொழில் |
| Religion | : | |
| Age | : | 32 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2025.

<u>(1 முதல் 9 எதிரிகள் மற்றும் 11, 12 எதிரிகள் ஆஜர், 10ம் எதிரி ஆஜர் இல்லை, 10ம் எதிரி தரப்பில் BNSS 355 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் திருவாடானை தாலுகா முள்ளிமுனை கிராமத்தில் வசித்து வருகிறேன். மீன்பிடித் தொழில் செய்து வருகிறேன். சாட்சிகள் பால்கண்ணன், ராஜா, அழகுராஜா ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். எங்கள் ஊர்க்காரர்கள்தான். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை 06.00 மணியளவில் எங்கள் கருப்பன் கோவிலில் வைத்து ஊர்த்தலைவர் தேர்ந்தெடுப்பதற்காக ஊர்மக்கள் கூடியிருந்தார்கள். அப்போது சண்டை நடந்தது. யார்யாருக்கு சண்டை நடந்தது என்று தெரியாது. இருட்டாக இருந்ததால் தெரியவில்லை. யார்யாருக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் அழகுராஜாவுக்கும், பால்கண்ணனுக்கும் காயங்கள் ஏற்பட்டது. அந்த காயங்கள் யாரால் ஏற்படுத்தப்பட்டது என்றால் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. எனக்கு ஏற்பட்ட காயங்கள் குறித்து நடவடிக்கை எடுக்க புகார் கொடுக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில்  பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு  அனுமதி வழங்கப்பட்டது.)

<u>அரசு தரப்பு  குறுக்கு விசாரணை</u> –

போலிஸ் விசாரணையில் கடந்த 07.05.2018ம் தேதி  மாலை 05.00 மணி அளவில் எங்கள்ஊர் கருப்பணசாமி கோவில் சாமி கும்பிடுவது சம்மந்தமாக, புதிதாக ஊர் தலைவரை தேர்ந்தெடுப்பது சம்மந்தமாக நான், சாட்சிகள் பால்கண்ணன், அழகுராஜா, ராஜா மற்றும் ஆஜர் எதிரிகள் அனைவரும் அங்கு கூடியிருந்தோம் என்றும், அப்போது ஆஜர் எதிரிகள் அனைவரும் ஒன்றுகூடி பால்கண்ணனை பார்த்து நீதான் இந்த கூட்டத்திற்கு தலைவன் என்று சொல்லி தாக்கினார்கள் என்றும், அப்போது அழகுராஜா, மகாலிங்கம் ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டார்கள் என்றும், அப்போது எதிரிகள் அழகுராஜாவை பிடித்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றும், அதில் அவருக்கு சிராய்பு காயம் ஏற்பட்டது என்றும், உடனே எதிரி கதிரவன் என்பவர் வீட்டில் இருந்த அருவாளை எடுத்து வந்து பால்கண்ணனின் உச்சந்தலையில் ஓங்கிவெட்டினார் என்றும், அதில் பால்கண்ணனுக்கு தலையின் பின் பகுதியில் காயம் ஏற்பட்டது என்றும், அவர் அருகில் இருந்த நான், ராம்பிரசாத் ஆகியோர்கள் எதிரிகளை சத்தம்போட்டு போகச்சொன்னோம் என்றும், அழகுராஜாவுக்கு ஏற்பட்ட காயத்திற்கு திருவாடானை அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டார் என்றும் பால்கண்ணனுக்கு ஏற்பட்ட காயத்திற்கு தொண்டி காவல் நிலையத்தில் எதிரிகள் மீது புகார் கொடுத்தார் என்றும் ஆஜர் எதிரிகள் எங்கள் ஊர்க்காரர்கள் மற்றும் உறவினர்கள் என்பதால் தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> –  இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

Crl. Misc. 39

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF ADDITIONAL DISTRICT COURT, RAMANATHAPURAM**

| | | |
|---|---|---|
| Calendar .. .. | } | |
| Miscellaneous .. .. | } | |
| Preliminary Register .. .. | } | **S.C.145/2024** |
| Sessions .. .. | } | |
| | } | Prosecution – **PW1** |
| Deposition of witness for | } | Defence – |
| | } | Court – |

| | | |
|---|---|---|
| Name | : | அழகுராஜா |
| Father Name | : | மலைமேகம் |
| Village | : | முள்ளிமுனை |
| Taluk | : | திருவாடானை |
| Calling | : | மீன்பிடித்தொழில் |
| Religion | : | |
| Age | : | 41 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.08.2025.

<u>(1 முதல் 9 எதிரிகள் மற்றும் 11, 12 எதிரிகள் ஆஜர், 10ம் எதிரி ஆஜர் இல்லை, 10ம் எதிரி தரப்பில் BNSS 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)</u>

**முதன்மை விசாரணை:–**

நான் திருவாடானை தாலுகா முள்ளிமுனை கிராமத்தில் வசித்து வருகிறேன். மீன்பிடித் தொழில் செய்து வருகிறேன். சாட்சிகள் பால்கண்ணன், ராஜா, மகாலிங்கம் ஆகியோர்களை தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை 06.00 மணியளவில் எங்கள் கருப்பன் கோவிலில் வைத்து ஊர்த்தலைவர் தேர்ந்தெடுப்பதற்காக ஊர்மக்கள் கூடியிருந்தார்கள். அப்போது சண்டை நடந்தது. யார்யாருக்கு சண்டை நடந்தது என்று தெரியாது. இருட்டாக இருந்ததால் தெரியவில்லை. யார்யாருக்கு காயங்கள் ஏற்பட்டது என்றால் எனக்கும், பால்கண்ணனுக்கும் காயங்கள் ஏற்பட்டது. அந்த காயங்கள் யாரால் ஏற்படுத்தப்பட்டது என்றால் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை. எனக்கு ஏற்பட்ட

காயங்கள் குறித்து நடவடிக்கை எடுக்க புகார் கொடுக்கவில்லை.

(இந்த சாட்சியை அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை –

போலிஸ் விசாரணையில் கடந்த 07.05.2018ம் தேதி மாலை 05.00 மணி அளவில் எங்கள்ஊர் கருப்பணசாமி கோவில் சாமி கும்பிடுவது சம்மந்தமாக, புதிதாக ஊர் தலைவரை தேர்ந்தெடுப்பது சம்மந்தமாக நான், சாட்சிகள் பால்கண்ணன், ராஜா மற்றும் ஆஜர் எதிரிகள் அனைவரும் அங்கு கூடியிருந்தோம் என்றும், அப்போது ஆஜர் எதிரிகள் அனைவரும் ஒன்றுகூடி பால்கண்ணனை பார்த்து நீதான் இந்த கூட்டத்திற்கு தலைவன் என்று சொல்லி தாக்கினார்கள் என்றும், அப்போது நானும், மகாலிங்கம் ஆகியோர் சண்டையை விலக்கிவிட்டோம் என்றும், அப்போது எதிரிகள் என்னை பிடித்து கீழே தள்ளிவிட்டார்கள் என்றும், அதில் எனக்கு சிராய்பு காயம் ஏற்பட்டது என்றும், உடனே எதிரி கதிரவன் என்பவர் வீட்டில் இருந்த அருவாளை எடுத்து வந்து பால்கண்ணனின் உச்சந்தலையில் ஓங்கிவெட்டினார் என்றும், அதில் பால்கண்ணனுக்கு தலையின் பின் பகுதியில் காயம் ஏற்பட்டது என்றும், அவர் அருகில் இருந்த ராம்பிரசாத், மகாலிங்கம் ஆகியோர்கள் எதிரிகளை சத்தம்போட்டு போகச்சொன்னார்கள் என்றும், எனக்கு ஏற்பட்ட காயத்திற்கு திருவாடானை அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றும் பால்கண்ணனுக்கு ஏற்பட்ட காயத்திற்கு தொண்டி காவல் நிலையத்தில் எதிரிகள் மீது புகார் கொடுத்தார் என்றும் ஆஜர் எதிரிகள் எங்கள் ஊர்க்காரர்கள் மற்றும் உறவினர்கள் என்பதால் தற்போது எதிரிகளை இவ்வழக்கிலிருந்து காப்பாற்றும் நோக்கத்தில் உண்மையை மறைத்து பொய் சாட்சி சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/-சி.மோகன்ராம்,

கூடுதல் மாவட்ட நீதிபதி,

இராமநாதபுரம்.